பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

நாள்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆவணி 17 வியாழக்கிழமை (02-09-1993) UTHAYAN—A Lively National Tamil Daily இதழ் 278

# மண்கி[illegible]டி, கடற்தாக்குதல்கள் போன்று மீ[illegible]டும் தாக்குதல்கள்

## பிரதமர் ரணில் அச்சம் தெரிவிக்கிறார்

கொழும்பு, செப்டெம்பர் 2

மண்கிண்டிமலை, மற்றும் கிளாலி, பருத்தித்துறை கடற்தாக்குதல்கள் போன்ற பெரிய தாக்குதல்களை விடுதலைப் புலிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் மீண்டும் நடத்துவர் என எதிர்பார்க்கலாம்.

இவ்வாறு அச்சம் தெரிவித்தார் பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா.

பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்கா நேற்று நடைபெற்ற இலங்கை வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அப்போதே அவர் விடுதலைப் புலிகளின் பலத்தைக் கண்டு அரசாங்கம் நிலை குலைந்துள்ளது, நடுக்கம் கண்டுள்ளது என்பதனைப் பிரதிபலிக்கும் விதத்தில் மேற்கண்டவாறு அச்சம் வெளியிட்டார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்கு அடுத்தவருடமே தீர்வு என்கிறார் பிரதமர் ரணில்

### தொண்டமானின் யோசனை பற்றித் தெரியாதாம்

இனப்பிரச்சினைக்கு அடுத்த வருடமளவிலேயே தீர்வு காண முடியும் என்று அரசாங்கம் எதிர்பார்ப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்றுத் தெரிவித்தார்.

வெளிநாட்டுச் செய்தியாளர் சங்கக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

போரை நிறுத்துவதற்கும், சமாதானத்தைக் கொண்டு வருவதற்கும் எந்தக் குழுவுடனும் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு அரசு எப்போதுமே தயாராக இருக்கிறது. திறந்த மனதுடன் இருக்கிறது. இந்த வகைய பேச்சுகளில் சிறிய தமிழ் அரசியல் கட்சிகளும், சிங்கள எதிர்க் கட்சிக் குழுக்களும் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் — என்றும் பிரதமர் தெரிவித்தார்.

வெளிநாடு சென்று வந்த அமைச்சர் தொண்டமான் சமாதான யோசனை ஒன்றுடன் வந்திருப்பதாக கூறப்படுவது பற்றி திரு. ரணிலிடம் பிரஸ்தாபிக்கப்பட்ட போது—

தொண்டமானின் யோசனை குறித்து தமக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார்.

சமாதான யோசனை குறித்து தொண்டமான் தகவல் வெளியிட்ட இரண்டு தினங்களின் பின்னர் பிரதமர் இவ்வாறு கூறியிருப்பது அரசியல் அவதானிகள் மத்தியில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

## அம்பாறை மாவட்டத்தில் சிங்களவருக்கு துப்பாக்கி

யாழ்ப்பாணம், செப்டெம்பர் 02

அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர்களுக்கு துப்பாக்கிகளை வழங்க அரச நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காட்டு விலங்குகளிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக விவசாயிகளுக்கு துப்பாக்கிகளை வழங்கும் நடவடிக்கையின் பேரில் சிங்களவர்கள் அனைவருக்கும் துப்பாக்கிகளை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

அம்பாறையின் எல்லைப் பகுதியில் உள்ள சிங்களவர்களுக்கே முதலில் துப்பாக்கிகள் வழங்கப்படவுள்ளன. அந்தந்தப் பகுதி பொலீஸ் அத்தியட்சகர்களின் சிபாரிசுடன் அவை வழங்கப்படவுள்ளன.

துப்பாக்கிகள் வழங்கும் இத்திட்டம் திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ரூபா 260 அலவன்ஸ் இம்மாத ஓய்வூதியத்துடன்

### நிலுவையும் வழங்கப்படும்

வாழ்க்கைச் செலவுப் படியாக அறிவிக்கப்பட்டுள்ள 260 ரூபா அலவன்ஸ் கொடுப்பனவு செப்டம்பர் மாத ஓய்வூதியத்துடன் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கு கிடைக்க விருக்கிறது.

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவு கணக்காளர் திரு. எஸ். வீரசிங்கம் மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் முதல் அறிவிக்கப்பட்ட அலவன்ஸ் நிலுவையுடன் செப்டம்பர் ஓய்வூதியத்துடன் வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

இந்த அலவன்ஸ் தொடர்பான சுற்று நிருபம் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதத்தாலேயே கொடுப்பனவும் தாமதமானதாக அவர் கூறினார். (இ-8)

## பருத்தித்துறைக்கு இன்று உணவுக் கப்பல் வருகிறது

யாழ்ப்பாணம், செப். 2

பருத்தித்துறை துறைமுகத்துக்கு இன்று வியாழக்கிழமை உணவுக் கப்பல் மீண்டும் வரவுள்ளது. ''குமாரி'' கப்பலே இன்று வரும் என்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் யாழ். அரச அதிபருக்கு நேற்றுத் தகவல் கொடுத்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த ''வாதுவ'' கப்பல் திடீரென காங்கேசன்துறை சென்றது தெரிந்ததே.

மூன்று நாள் இடைவெளியின் பின்னர் உணவுக் கப்பல்கள் மீண்டும் இன்று வரவிருப்பதாகவும், அதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளதாகவும் அறியப்படுகிறது.

வழமைபோல் பொருள்களை கப்பலில் இருந்து பொறுப்பேற்கவும், அவற்றை இறக்குவதற்கும் வேண்டிய ஒழுங்குகளை யாழ். செயலகம் மேற்கொண்டுள்ளது.

இதேவேளை—

ஏற்கனவே இங்கிருந்து திரும்பிச்சென்ற 'வாதுவ' கப்பலும் கொழும்பில் இருந்து வடக்கு நோக்கிப் புறப்பட்ட 'ருஹுணு' கப்பலும் தற்சமயம் திருமலையில் தரித்து நிற்ப

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கிளாலிப் பகுதியில் இரவு நேர ஷெல் வீச்சு

தென்மராட்சி, செப். 2

இயக்கச்சி, வெற்றிலைக்கேணி, பூநகரி இராணுவ முகாம்களில் இருந்து தினமும் இரவு நேரங்களில் கிளாலிப் பகுதியை நோக்கி ஷெல் வீச்சுக்கள் இடம் பெறுகின்றன.

இதனால் பூநோப்பனை கிளாலிப்பகுதி மக்கள் இரவில் நித்திரை இன்றி அச்சத்துடன் விழித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் இரவு 11.45 மணியளவில் இயக்கச்சி இராணுவ முகாமில் இருந்து துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது. (இ-117-15)

## சித்த மருத்துவ மாணவர் ஆணைக்குழுவுடன் பேச்சு

கொழும்பு, செப். 2

கொழும்பு சென்றுள்ள யாழ். சித்த மருத்துவ மாணவர் குழுவினர் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவரை இன்று சந்தித்துப் பேசவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். சித்த மருத்துவத் துறையை தனிப்பீடமாக மாற்றக்கோரி போராட்டம் நடத்திவரும் மாணவர்களின் பிரதிநிதிகள் குழு ஒன்று இது விடயமாக, பேச்சு நடத்தவும், தெற்குப் பல்கலைக்கழக அமைப்புக்களின் ஆதரவைப் பெறவும் கொழும்பு சென்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடம்:

## 200 பேருக்கு வெற்றிடம் ஆனால் 67 பேரே தகுதி

கொழும்பு, செப். 2

1991 — 92 கல்வி ஆண்டுக்கென 200 மாணவர்களை யாழ் பல்கலைக் கழக மருத்துவ பீடத்துக்குச் சேர்த்துக் கொள்ள வசதிகள் உள்ள போதிலும் 67 மாணவர்களே உரிய தகுதிகளைப் பெற்றுள்ளனர். அதே போன்று 1990 — 91 ஆம் கல்வி ஆண்டிலும் யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தைப் பொறுத்த வரை 150 மாணவர்களைச் சேர்ப்பதற்கு வசதி இருந்தது. எனினும் 108 மாணவர்களே தகுதி பெற்றிருந்தனர்.

உயர்கல்வி அமைச்சர் திஸ்ஸ அத்தநாயக்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

1991 — 92 ஆம் கல்வி ஆண்டுக்காக இலங்கையில் உள்ள பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கை எவ்விதத்திலும் குறைக்கப்படமாட்டாது.

மருத்துவ போதனா பீடத்துக்கு அனுமதிக்கப்படும் மாணவர் எண்ணிக்கையும் குறைக்கப்படமாட்டாது.

பல்கலைக் கழக அனுமதி

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுன்னாகத்தில்

## மாதிரி குடியேற்றத் திட்டம் நேற்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், செப். 2

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் சுன்னாகம் தெற்குப் பகுதியில் அமைத்துள்ள மாதிரி குடியேற்றத் திட்டம் நேற்று மாலை 5 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி ரதி குடியிருப்பை திறந்து வைத்தார்.

சுன்னாகம் சிற்றூர் பொறுப்பாளர் திரு கலியுகன் தலைமையில் திறப்பு விழா நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. யாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தேசியக்கொடியை ஏற்றி வைத்தார். (இ-5)

முல்லைத்தீவில்

## படையினரின் முன்னேற்ற முயற்சி புலிகளால் முறியடிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிங்களக்குடியிருப்புக்களில் அமைந்துள்ள இராணுவ முகாம்களில் இருந்து நேற்று முன்தினம் படையினர் முன்னேற எடுத்த முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்தனர்.

பட்டிக்குடியிருப்பு பகுதியை நோக்கி நண்பகல் ஒரு மணி வரை கடும் ஷெல் தாக்குதல்களை நடத்திய படையினர் தொடர்ந்து முன்னேற முயன்றனர்;

முன்னேறிய படையினரை எதிர்த்து பிற்பகல் 1.30 மணியளவில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

அதனையடுத்து அங்கு மோதல் ஏற்பட்டது.

மோதலை அடுத்துப் பின்னர் படையினர் பின்வாங்கிச் சென்றனர். இந்த மோதலின் போது படையினரிடமிருந்து 303 ரக ஷெல் ஒன்றையும் [illegible] புலிகள் கைப்பற்றினர்.

## இஸ்ரேல், பலஸ்தீன இயக்கம் பரஸ்பரம் அங்கீகரிக்க முடிவு

லண்டன், செப். 1

ஜோர்தானின் மேற்குக் கரையில் உள்ள ஜெரிக்கோவிலும் காஸாவிலும் பலஸ்தீனர்களுக்கு சுயாட்சி வழங்கும் திட்டத்தின் ஓர் அம்சமாக இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் பரஸ்பரம் அங்கீகரிக்க உள்ளன என்று நேற்று ஜெருசலத்திலும் டியூனிஸிலும் வாஷிங்டனிலும் இருந்து வெளியான தகவல்கள் தெரிவித்தன.

இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் சிமோன் பெரெஸ் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் இரகசியமாக நடத்தி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனை

இறைச்சிக்கோழிகள், விறாத்துக் குஞ்சுகள் (சேவல்) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: திருமகள் க்ரேச்சிஸ், 705, கே.கே.எஸ். வீதி, சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். (27148)

### மணமகள் தேவை

யாழ். இந்து. 33 வயது, திருவாதிரை, 7இல் செவ்வாய், M. B. B. S. டாக்டருக்கு அழகும், நற்குண முமுடைய படித்த மணமகள் தேவை. சீதனம் உட்பட முழுமையான விவரங்களுடன் கடித மூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 556, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (27120)

### இலவச திருமண சேவை

31 வயது பூஷம், சுவிஸ் மணமகனுக்கும், 29 வயது உத்தராடம், B. A. சுவிஸ் மணப்பெண்ணுக்கும் ஏற்ற மணமக்கள் தேவை திருமணம் இலங்கை / சுவிஸில் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலையில். து. விமலா, இலவச திருமண சேவை, யாழ். நாச்சிமார் கோவிலடி. (27145)

## BITSMANS

கல்வி நிறுவனம்
மானிப்பாய்

துரிதமாக ஆங்கிலம் இலகு முறையில் கற்பதற்கு 3 மாத பயிற்சி வகுப்புக்கள்

**SPOKEN ENGLISH WITH GRAMMAR**

BY
M. A. ஹரி
B. A. DIP. IN ENG.

ஆரம்பம்: 3-9-93 வெள்ளி 9.00 A. M.

(சி/6028)

## கலை, வர்த்தக கல்லூரி

C. C. A.

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

கணக்கியல்
வணிகமாணி
முதற்தேர்வு
(First in Com)
வணிகமாணி I
(B. Com Part I)

ஆரம்பம்:
3 - 9 - 1993
பிற்பகல் 3 மணி

குறிப்பு:
முற்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

ஸ்ரீ B. Com (Hons)

(சி-6026)

## விஞ்ஞானக் கல்வி நிலையம்

நல்லூர்

**O/L 1993**

வினா விடை வகுப்பு
ஆரம்பம்
04 - 09 - 93
காலை 7.00 மணி

கணிதம்:-
திரு. ஜெயகுமார்
விஞ்ஞானம்:-
திரு. கொலின்ஸ்
தமிழ்:-
திரு. தங்கராஜா
சமூகக்கல்வியும், வரலாறும்:-
திரு. கோபி
வர்த்தகம்:-
திரு. ஜீவா
ஆங்கிலம்:-
திரு. சௌந்தரபாண்டியன்
திரு. நிமலன்

(சி/6029)

---

தென்மராட்சி மேற்கு
ப. நோ. கூ. சங்கம், கைதடி

## 106-9 - வர்த்தக முகாமையாளர் பதவிக்கான

# விண்ணப்பம் கோரல்

சம்பள அளவுத்திட்டம்:

905 — 1605
40/- X 5 — 50/- X 10

(அத்துடன் கூ. வே. ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிகளும்)

மேற்படி பதவிக்கு கீழ்வரும் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து கல்விச் சான்றிதழ், பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அனுபவச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், ஆகியவற்றின் பிரதிகளுடன் "பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு, ப நோ. கூ. சங்கம், கைதடி" என்ற விலாசத்திற்கு 18-09-1993க்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அல்லது நேரிலோ சமர்ப்பித்து உறுதிப்படுத்தவும்.

**குறிப்பு:**

விண்ணப்பத்தின் கடித உறையின் இடது பக்கத்தில் "வர்த்தக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம்" என எழுதப்படல் வேண்டும்.

**கல்வித்தகைமை:**

1. கூட்டுறவுப் பணியாளர் 10ஆவது சம்பளத்திட்டத்தில் மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளர், 11ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான, பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

அல்லது

2. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் உயர்தரம்/ க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் சந்தைப்படுத்தல்/வழங்கல்/பொருள் விநியோகம் பொருட்களின் இறக்குமதி/ஏற்றுமதி என்ற துறையில் வர்த்தக / தொழிற்றுறை ஸ்தாபனம் ஒன்றில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

**வயது:**

23 — 40 வருடம் (சங்க ஊழியர்களுக்கு வயது எல்லை கணிக்கப்படமாட்டாது)

**நிபந்தனைகள்:**

விண்ணப்பதாரர் 3 வருடங்களுக்கு மேல் யாழ். மாவட்டத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும். சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆ) ஆங்கிலம், சிங்களம் பேச, எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது.

இ) நிறுவனங்களில் தற்போது கடமையாற்றுபவர்கள் நிறுவனத் தலைவருடாக விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும்.

**பிணைப்பணம்:**

ரொக்கம் ரூபா 5,000/-, ஆளைப்பிணை ரூபா 25,000/- செலுத்தல் வேண்டும்.

— பொதுமுகாமையாளர்.

தென்மராட்சி மேற்கு ப. நோ. கூ. சங்கம்,
கைதடி,
30-08-1993. (சி-5868)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில்: 14 — 06 — 1974



ஆண்டவன் அணைப்பில்: 04 — 08 — 1993

### நவநீதகிருஷ்ணன் தேவதாசன்
(தேவன்)

தேவா! பாசத்துடன் நாம் வளர்த்த கருத்துமிக்க பொக்கிஷமே! குணத்தில் - உயர்ந்தவனே!
புன்னகையின் பொற்பமைந்த உன் இனிய வண்ண முகம் - தேவன்!
பூந்தமிழின் ஓசையெல்லாம் நாடெங்கும் கேட்க தேன்பாயும் எம் காதில் உன் பாடல் ஒலிக்க தரணியில் நீயும் உயர்ந்திருப்பாய் என்றிருக்க தேவனை, தேவன் தன் அருகிலிருந்த உனை அழைத்தாரோ
பூவே! நீ இன்றி எப்படித்தான் தேறுவோம்;

இன்று (2-9-93) வியாழக்கிழமை வீட்டில் நடைபெறும் அன்னாரது அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

என்றும் உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதர, சகோதரிகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்.

"பிருந்தாவனம்",
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (27130)

---

## VINYL'S INSTITUTE

சுன்னாகம்

க.பொ.த. உயர்தர கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

| | | சனி | ஞாயிறு | செவ். | வியா. |
|---|---|---|---|---|---|
| பொருளியல் திரு. கலாகரன் | 94 | 3.30 | 3.30 | — | — |
| | 95 | 5.00 | 5.00 | — | — |
| வர்த்தகம் திரு. தேவா | 94 | — | — | 4.00 | 4.00 |
| | 95 | — | — | 5.00 | 5.00 |
| கணக்கியல் திரு. S.K. பிரபாகரன் | 94 | 5.00 | 5.00 | — | — |
| | 95 | 4.00 | 4.00 | — | — |
| அளவையியல் திரு. S. S. மனோகரன் | 94 | — | — | 3.00 | 3.00 |
| | 95 | — | — | 4.00 | 4.00 |
| இந்துநாகரீகம் திரு. சிவமகாலிங்கம் | 94 | 8.00 | 8.00 | — | — |
| | 95 | 6.00 | 6.00 | — | — |
| தமிழ் திரு. கணேஸ் | 94 | 9.00 | 9.00 | — | — |
| | 95 | 8.00 | 8.00 | — | — |
| இந்துசமயம் திரு. சிவமகாலிங்கம் | | 7.00 | 7.00 | — | — |

(சி-2026)

---

## எடிசன் அக்கடமி

(யாழ். இந்துக் கல்லூரி அருகில்)
411/1, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**SPOKEN ENGLISH**

By: Mr. BRITTO

சனி, ஞாயிறு பிற்பகல் 2 மணி — 3 மணி

ஆரம்பம்: 05 - 09 - 1993
ஞாயிறு 2 மணி

(27150)

---

## VINYL'S INSTITUTE

சுன்னாகம்

க. பொ. த. உயர் தர விஞ்ஞான வகுப்புக்கள் நடைபெறுகின்றன.


| | | சனி | ஞாயிறு | செவ். | வியா. |
|---|---|---|---|---|---|
| இரசாயனவியல் திரு. செல்வா | 94 A/L | 11-00 | 11-00 | — | — |
| | 95 A/L | 10-00 | 10-00 | — | — |
| பௌதீகவியல் திரு. இரவீந்திரநாதன் | 94 A/L | — | — | 4-30 | 4-30 |
| | 95 A/L | — | — | 5-30 | 5-30 |
| தாவரவியல் திரு. செல்வநேசன் | 94 A/L | 8-00 | 8-00 | — | — |
| | 95 A/L | 4-00 | 4-00 | — | — |
| விலங்கியல் திரு. செங்காதான் | 94 A/L | 6-00 | 6-00 | — | — |
| | 95 A/L | 7-00 | 7-00 | — | — |
| தூய/பிரயோக கணிதம் திரு. கமலசிங்கம் | 94 A/L | 6-00 | 6-00 | — | — |
| | 95 A/L | 8-00 | 8-00 | — | — |

(சி/2027)

---

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 01 — 1927



மறைவு: 14 — 09 — 1992

திதி: 02-09-1993

### அமரர் நல்லதம்பி இரத்தினம்

ஆண்டொன்று ஓடி மறைந்து போனதையா பொங்கி வரும் துயரந்தான் மறையவில்லை ஆசையுள்ள ஐயாவே குடும்பத்தின் ஒளிவிளக்கே தேடுவோம் தேடியும் காணாது துயரோடு வாடுகின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இல. 38,
1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (27152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தன் கையே தனக்கு உதவி

1956ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களில் 67,000 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இந்தப் புள்ளி விவரத்தை வெளியிட்டிருப்பவர் அமெரிக்காவின் மசாசூசெட் மாநில முதல்வர் மைக்கல் ஈகப்புவானா.

வெளிநாட்டவர் தரும் புள்ளி விவரம் சரியான மதிப்பீடாக இருக்குமா என்ற சந்தேகம் எவருக்கும் எழலாம். ஆனால் மசாசூசெட் மாநில மக்களும், மாநில அரசும், அரசுத் தலைவர்களும் ஈழத் தமிழர் விவகாரங்களில் நிறைந்த அக்கறையும், கரிசனையும் உடையவர்கள்.

1977 ஆம் ஆண்டிலேயே தமிழீழத்துக்கு ஆதரவாகக் கொடி ஏற்றியவர்கள் கடந்த ஜூலை 23 ஆம் திகதியன்று தமிழீழ தினத்தைப் பிரகடனம் செய்து கொண்டாடியவர்கள். ஆகையால் அவர்கள் திரட்டிய புள்ளி விவரம் சரியாக இருக்கும் என எடுத்துக் கொள்ளலாம்.

தமிழர்களுக்கு எதிரான இனத்துவேசமும், இன ஒடுக்குமுறை நோக்கமும் சுதந்திரம் கிடைப்பதற்கு முன்னரே சிங்களத் தலைவர்களிடம் உள்ளே புகைந்து கொண்டிருந்தது. 1956ஆம் ஆண்டில் அது வெளிப்படையாக எரியத் தொடங்கியது. அதன் பின்னர் 1958, 1966, 1977, 1981, 1983ஆம் ஆண்டுகளில் தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைத் தாக்குதல்கள் கட்டவிழ்த்து விடப்பட்டன. இவற்றைப் பலரும் பொதுவாக இனக்கலவரங்கள் என்று எழுதியும் பேசியும் வருவதுண்டு. ஆனால் உண்மையில் அவை இனக்கலவரங்கள் அல்ல. அப்போது தமிழர்கள் சிங்களவர்களை எதிர்த்து தாக்குதல் நடத்தவில்லை. அவை முழுக்க முழுக்க இனப்படுகொலைகளே.

அந்த ஆறு தடவைகளிலும் நடந்த இனப்படுகொலைகளில் மட்டும் 67,000 தமிழர்கள் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள் என்றால் —

அதன் பின்னர் அவ்வப்போது அரசாங்கப் படைகள் நடத்திய இனப்படுகொலைச் சம்பவங்களிலும், இப்போது நடக்கும் மூன்றாண்டுப்போரிலும் கொலையுண்ட அப்பாவித் தமிழ் மக்களின் எண்ணிக்கை 25,000 பேர் என உத்தேசமாகக் கணக்கிடப்படுகிறது. (இந்திய இராணுவம் கொன்ற 6,000 தமிழர்களின் எண்ணிக்கை இதில் சேர்க்கப்படவில்லை)

தமது உரிமைகளைக் கேட்டதற்காக, ஒரு லட்சம் தமிழர்கள் இனப்படுகொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களை விட சுமார் 40,000 தமிழர்கள் காணாமற்போயிருக்கிறார்கள்!

இத்தனைக்கும் பிறகு, ஸ்ரீலங்கா அரசாங்கம் தமிழர் பிரச்சினையை உள்நாட்டு விவகாரம் என்றும், வடக்கு-கிழக்கு யுத்தம் பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்றும் ஏமாற்றி வருகிறது.

அரச பயங்கரவாதம் மூலம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான தமிழர்களை இனப்படுகொலை செய்துவிட்டு பயங்கரவாதத்தை தடுக்கவே போர் என்று அரற்றுகிறது அரசு!

இது ஒன்றே, தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கையை வெளிநாடுகள் அங்கீகரிக்கப் போதுமானதாகும். ஆனால் வெளி உலகம் ஸ்ரீலங்கா அரசின் ஏமாற்று வித்தையை நம்பிக் கொண்டிருக்கிறது.

எனவே தமிழர்கள் தங்களை இனப்படுகொலையில் இருந்தும், இனஒழிப்பில் இருந்தும் பாதுகாக்கத் தமக்கென ஒரு நாடும், அரசும் அமைப்பது அவசியம். அதனை அவர்கள் தாங்களே போராடிப் பெற வேண்டும். வேறு எவர் உதவியையும் நம்பி இருக்க முடியாது. தன் கையே தனக்கு உதவி.

# ஓய்வூதியரின் கோவைகள் இங்கு எடுத்து வரப்படுகின்றன

யாழ்ப்பாணம், செப். 2

ஓய்வூதியக் கொடுப்பனவுகளைப் பன்முகப்படுத்தும் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட ஓய்வூதியர்களின் கோவைகள் கொழும்பில் இருந்து இங்கு எடுத்துவரப்பட உள்ளன.

ஓய்வூதியர்கள் தமது தேவைகளை இங்கேயே பூர்த்திசெய்ய வசதியாகவே இக்கோவைகள் இங்கு எடுத்து வரப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 12 ஆயிரம் ஓய்வூதியர்களின் கோவைகள் 'ருகுணு' கப்பல் மூலம் எடுத்து வர ஏற்பாடாகி உள்ளது. (இ-8)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், செப். 2

பாஷையூர்புனித அந்தோனியார் சிறுவர் பாடசாலை 25 ஆம் ஆண்டு நிறைவு விழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-8)

## நாளை

ஜெயஸ்ரீ நாடக மன்றத்தினர் வழங்கும் சம்பூரண அரிச்சந்திரா நாட்டுக்கூத்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும். (க)

### ஆலயங்கள் மீது குண்டுவீச்சு:

## இந்து மதகுருமார் ஒன்றியம் கண்டனம் தெரிவிப்பு

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீதும் ஏனைய இந்து ஆலயங்கள் மீதும் அண்மைக் காலத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களுக்கு இந்து மதகுருமார் ஒன்றியம் வன்மையான கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆலய உற்சவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அடியார்களின் மனோ நிலையை பாதிக்கும் வகையிலும், அவர்களின் வழிபாட்டுக்கு குந்தகம் ஏற்படும் வகையிலும் இத்தகைய குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்வது மனிதாபிமானமற்றதொரு செயல் என தனது கண்டன அறிக்கையில் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தாக்குதல் சம்பவங்களின் போது மரணமடைந்த அடியார்களின் குடும்பத்தவர்களுக்கு ஒன்றியம் தனது இரங்கலை தெரிவிப்பதோடு, படுகாயமடைந்தவர்கள் விரைவில் பூரண சுகமடைய பிரார்த்திப்பதாகவும் தெரிவித்துள்ளது. (ஒ-152)

### யாழ்., கிளிநொச்சி மாவட்டங்களில்

## 400 மைல் பிரதான வீதியை திருத்த 7 வருடங்கள் தேவை

யாழ்ப்பாணம், செப். 2

சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டால் தேசிய வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பின் கீழுள்ள கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் உள்ள 400 மைல்கள் நீளமான பிரதான வீதிகளின் தரமான திருத்த வேலைகள் மேற்கொள்ள 7 வருடங்கள் தேவைப்படுமென வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களின் பிரதம பொறியியலாளர் தெரிவித்தார்.

தரமான முறையில் வீதிகளை அபிவிருத்தி செய்வதாயின் ஒரு மைலுக்கு 5 லட்சம் ரூபா வரை செலவாகும் என்றும், 400 மைல்கள் நீளமான வீதிகளையும் சிறு திருத்தங்கள் மேற்கொள்வதாயின் இரண்டு வருடங்கள் போதுமானதாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் 80 மைல்கள் நீளமான வீதிகளும், யாழ்ப்பாண மாவட்டத்தில் 320 மைல்கள் நீளமான வீதிகளும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-162)

## ரஷ்ய நாட்டுச் சீரழிவை எண்ணி குமுறுகிறார் கோர்பி

### மூவர் மீது பழி போடுகிறார் அவர்

மொஸ்கோ, செப். 2

"ரஷ்ய நாடு இன்னாபின்னப்படுகிறது. ரஷ்ய ஜனாதிபதி போறிஸ் யெல்ற்சின், பெலோறஸ் தலைவர், உக்ரேயின் தலைவர் ஆகிய மூவரே சோவியத் யூனியன் என்ற மேல்நிலை அமைப்பின் வீழ்ச்சியை ஏற்படுத்தினார்கள்"

சோவியத் யூனியனின் முன்னாள் அதிபர் மிக்கேல் கோர்பச்சேவ் அண்மையில் "கொமோசோ மொல்ஸ்கயா பிராவ்டா" என்ற ரஷ்ய பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு கூறினார்.

1991ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19ஆம் திகதி நடந்த ஆட்சிக் கவிழ்ப்பினால் பதவி நீக்கப்பட்ட கோர்பச்சேவ் தாம், குடியரசுகளுக்கு மேலும் அதிகாரம் வழங்கும் அதேவேளையில் சோவியத் யூனியனையும் ஒன்றுபட்ட பொருளாதாரத்தையும், கூட்டு ஆயுதப்படைகளையும் பாதுகாக்கப் பாடுபட்டதாகவும் ஆனால் தமது முயற்சிகள் தோற்கடிக்கப்பட்டுவிட்டன எனவும் கூறினார்.

"மேற்படி" இனத்தவர்களான மும்மூர்த்திகள் சோவியத் யூனியனை இல்லாமற்செய்து புதிய சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பு ஒன்றை உருவாக்குவதைப் பிரகடனம் செய்தார்கள். இவ்வாறுதான் அந்த மூவரும் ஒரு நாட்டை நிர்மூலமாக்கினார்கள் என்று கோர்பச்சேவ் மேலும் கூறினார்.

கோர்பச்சேவின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 1991 டிசம்பரில் சோவியத் யூனியன் சிதறுண்டது என்பது தெரிந்ததே. (க)

## சுன்னாகம் நீதிமன்றில் விசாரணைகள் துரிதம்

வலிகாமம் தெற்கு. செப் 2

சுன்னாகம் தமிழீழ நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. வழக்கு விசாரணைகளைப் பார்வையிடுவதற்காக பெரும் எண்ணிக்கையான மக்கள் தினமும் நீதிமன்றத்தில் குழுமியிருப்பதைக் காண முடிகின்றது.

கடந்த சில தினங்களில் பல திருட்டு வழக்குகளும், குடும்ப விவகாரம் சம்பந்தமான வழக்குகளும் விசாரணை செய்யப்பட்டன.

நீதியாளர்கள் திரு. க. தேசிகன், திரு. ச. பூவேந்தன், திரு. சி. ஒப்பிலான் ஆகியோர் தலைமையில் விசாரணைகள் நடைபெற்றன.

★ கந்தையா தில்லைநாதன் என்பவர் ரூபா 3,000 பெறுமதியான சைக்கிளை திருடியதாகவும் அதற்கு உடந்தையாக இராசகாமி துரைராசா இருந்தார் எனவும் சுன்னாகம் காவல்துறையினர் தொடுத்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டார். அவருக்கு மூன்றுமாத சிறைத்தண்டனையும் 800 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. கந்தையா தில்லைநாதன் சமூகமளிக்காமையால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

★ சண்முகநாதன் சிவகுமார், பத்மநாதன் பத்மசிறி ஆகியோர் துரைசாமி ஜெயசீலனுக்குச் சொந்தமான "அல்கறீன் பம்ப்" ஒன்றை திருடியமைக்காக தலா 700 ரூபா அபராதமும் ஒரு மாத சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

★ கட்டையன் புவேந்திரன் என்பவர் சட்ட விரோதமாக கசிப்பு வைத்திருந்தமைக்காக அவருக்கு 400 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

★ கிருஷ்ணபிள்ளை தருமலிங்கம் என்பவரிடம் இருந்து 4,500 ரூபா பெறுமதியான வெற்றிலையைத் திருடிய குற்றத்திற்காக கணபதிப்பிள்ளை பகீரதருபனுக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (ஒ-152)

## ஆலயங்களில்

கொக்குவில் மேற்கு அருள்மிகு சூடு உகந்த விநாயகர் ஆலய அலங்கார உற்சவ காலத்தில் "திருவிளையாடற் புராணம்" என்னும் பொருள் பற்றி உரையாற்றிய சிவநெறித் தொண்டர் திரு. சத்தியமூர்த்தி பூர்த்திநாளாகிய இன்று பாராட்டி கௌரவிக்கப்படவுள்ளார். இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. எம். மகாலிங்கம் கலந்து கொள்வார். (ஒ)

o o o

வட்டுக்கோட்டை கிழக்கு துறட்டிப்பனை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை நடைபெறும். (க-161)

o o o

வல்லை நெடியகாட்டுத் திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் மஹோற்சவ விசேட நிகழ்ச்சிகளில் நாளை வெள்ளிக்கிழமை பண்டிதர் க. முத்துவேலுவின் உரை இடம்பெறும்.

## கரும்புலிகளின் சாதனையை முழு உலகமும் வியக்கிறது

### சுன்னாகம் கூட்டத்தில் உரை

கரும்புலிகள் தமது உயிரை துச்சமென மதித்து, எதிரியை முழுமையாக அழித்து சிங்கள அரசை நிலைகுலைய வைத்துள்ளார்கள். இலட்சியக் கனவுகளுடன் ஆகுதியான அந்த கரும்புலிகளின் சாதனையை எண்ணி உலகமே வியக்கிறது!

இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் வலிகாமம் மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் சந்திரிகா.

சுன்னாகத்தில் நேற்று முன்தினம் மாலை நடந்த கடற் கரும்புலிகளின் அஞ்சலிக் கூட்டத்தில் பேசுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது!

"நான் அழிவதன் மூலம் எதிரி முழுமையாக அழிக்கப்பட்டு சுதந்திர தமிழீழம் அமையும்" என்ற கனவுடன் ஆகுதியான கடற்கரும் புலிகள் உலகமே வியக்கும் உன்னத சாதனையை நிகழ்த்தியுள்ளார்கள்.

சுதந்திரமான ஒளிமயமான எதிர் காலத்தை தமிழ் மக்கள் காண வேண்டும் என்ற இலட்சிய வேட்கையில், தாமாக முன் வந்து கரும்புலியாகிறார்கள். அவர்கள் சாதனையை தமது மக்கள் மதிக்க வேண்டும்" என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் துணைப் பொறுப்பாளர் இளையவன் பேசுகையில்—

கடற் கரும்புலித் தாக்குதல் ஒரு நாள் இரண்டு நாள் திட்டமிட்டு செய்ய முடியாது. இந்தத் தாக்குதல் சுமார் 10 நாட்கள் காத்திருந்தே நடத்தப்பட்டது என்றார்.

நல்லூர் வட்டப் பொறுப்பாளர் திரு. எழிலன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் விடுதலைப்புலிகள் பிரமுகர்கள் பலர் உரையாற்றினர். (ஒ-8-89)

## சித்த மருத்துவத்தை வளர்க்க பல்கலைக்கழக ஆய்வு தேவை

### கருத்தரங்கில் உரை

யாழ்ப்பாணம், செப். 2

"தமிழரின் சித்த வைத்தியம் 5,000 ஆண்டுகளுக்கு முன்னரே உலக வைத்தியமாகப் பரவியிருந்தது. சித்த மருத்துவத்தின் நவீன வளர்ச்சிக்குப் பல்கலைக்கழக மட்டத்திலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்."

"சித்த மருத்துவம் மக்கள் மயப்படுத்துதல்" என்ற பொருளில் கடந்த 29ஆம் திகதி இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் ஆரம்பித்த இரண்டு நாள் கருத்தரங்கில் பேசிய வைத்தியப் பேரறிஞர் திரு. க. பாலசுப்பிரமணியம் இவ்வாறு கூறினார்.

யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. இ. சபாரத்தினம் தலைமையில் உள்ளூராட்சித் திணைக்களமும் சித்த வைத்தியக் கூட்டுறவுச் சங்கமும் இணைந்து [illegible] மேற்படி கருத்தரங்கின் [illegible] நாள் நிகழ்ச்சியில் தொடர்ந்து பேசிய அவர் "உலக சுகாதார தாபனம் தாமதமின்றி இதனை அங்கீகரிக்க வேண்டும் என்று கூறினார்.

திரு. இ. சபாரத்தினம் தமது தலைமை உரையில்,

தமிழரின் தனித்துவமான சித்த மருத்துவத்துறையை வளர்ப்பதில் நாம் போதிய அக்கறை செலுத்தவில்லை. மேலைத்தேச வைத்தியர்களோ இந்தத் துறை குறித்த தெளிவு பெறுவதில் மிகுந்த ஆர்வத்துடன் ஈடுபடுகின்றனர். இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான மூலிகைகள் இருந்தும் அவற்றில் ஒரு வீதமானவற்றையே நாம் பயன்படுத்துகின்றோம் என்று கூறினார்.

திரு. வ. கந்தையா பேசும்போது 1961இல் சுதேச வைத்திய சபை அமைக்கப்பட்ட போதும் சித்த வைத்தியர்கள் [illegible] அடக்கும் நோக்குடன் ஆயுர்வேதத்திற்கு முன்னுரிமை கொடுத்து 1961இல் ஆயுர்வேதசபையை அமைத்தது. "இந் நிலையில் எமது சித்த மருத்துவத்துறையைப் பாதுகாக்கவும் ஒரு போர் தொடுக்க வேண்டியுள்ளது" என்று கூறினார்.

முன்னதாக வைத்திய கலாநிதி திருமதி தேவா மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கிவைத்தார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் க. பரமேஸ்வரன், பேராசிரியர் க. சி. குலரத்தினம், வைத்திய பூபதி அ. கிருஷ்ணசாமி, மில்க்வைற் தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆகியோர் உட்படப் பலர் பேசினார்கள். தமிழீழ கல்விப் பொறுப்பளர் திரு. வெ. இளங்குமரனும் கருத்தரங்கில் கலந்துகொண்டார். (க-111)

**வாயுச் சுத்தம் வனத்தாலாகும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராளிக் கலைஞரின் மிருதங்க அரங்கேற்றம்

செல்வன் அரியநாயகம் ஸ்ரீகாந்தாவின் (தினேஷ்) மிருதங்க அரங்கேற்றம் நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங் கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. புதுவை இரத்தினதுரை தலைமையில் அரங்கேற்ற நிகழ்ச்சிகள் நடைபெறும்.

மௌன அஞ்சலியைத் தொடர்ந்து யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி திரு. செல்வராசா, மகளிர் படையணி சிறப்புத் தளபதி செல்வி ஜெனா ஆகியோர் மங்கள விளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைப்பர்.

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழக துணைப் பொறுப்பாளர் திரு. சேரலாதன் வரவேற்புரை வழங்குவார்.

யாழ். பல்கலைக் கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை—வணபிதா ஜோசப் மைக்கல் அடிகளார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

தொடர்ந்து குரு வணக்கம் இடம்பெறும். தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் கலைஞர்களை கௌரவிப்பார்.

இசைவாரிதி பிரம்மஸ்ரீ இ. வீரமணிஐயர் மதிப்புரை வழங்குவார்.

நிகழ்ச்சியில் இறுதியாக இசையரங்கு இடம்பெறும்.

லயஞான திலகம் சி. மகேந்திரனின் மாணவரான செல்வன் அரியநாயகம் ஸ்ரீகாந்தா விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியாவார். (இ-5)


உ

கொக்குவில் மேற்கு
மஞ்சவனப்பதி முருகன் ஆலய
12ஆவது தின
அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

02 – 09 – 1993 வியாழக்கிழமை
பிற்பகல் 5-30 மணிக்கு
முருகப் பெருமானுக்கு விசேட
அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று
அதனைத் தொடர்ந்து —

மேளக்கச்சேரி
மாலை 6-30 மணி தொடக்கம்
நாதஸ்வரகான பூஷணம்
N. R. சந்தான கிருஷ்ணன் குழுவினர்

இரவு 8-30 மணிக்கு —
இன்னிசை கானங்கள்
S. G. சாந்தன் குழுவினர்

★ இந் நிகழ்வுகளுக்கு பங்களிப்பைத் தந்து உதவிய அடியார்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்:
மஞ்சவனப்பதி இளைஞர்கள்.

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(27146)



யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ.
வர்த்தக நிறுவனம்
பயிற்சி நெறிகள்

தட்டெழுத்து — ஆங்கிலத்திலும் தமிழிலும்
சுருக்கெழுத்து — ஆங்கிலத்திலும் தமிழிலும்

இத்துடன் ஆங்கிலம் எல்லோருக்கும் பொதுப் பாடமாகக் கற்பிக்கப்படும்.

மேற்கண்ட பயிற்சி நெறிகள் 15 - 09 – 1993இல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் தங்கள் விண்ணப்பங்களை கீழ்க்கண்ட விலாசத்திற்கு 10-09 1993 இற்கு முன்னர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எம். தம்பித்துரை,
பொதுச் செயலாளர்.

வை. எம். சி. ஏ.,
யாழ்ப்பாணம்.
(இ-5869)



மிருதங்க அரங்கேற்ற
நன்றி நவிலல்

28 - 08 - 1993 இல் நடைபெற்ற எமது புதல்வன் சிவசுந்தரின் மிருதங்க அரங்கேற்றத்தைச் சிறப்பித்த ஆசிரியர் மிருதங்க வித்தகர் திரு. க. ப. சின்னராசா அவர்களுக்கும், அணிசெய்த கலைஞர்கள் தலைமை வகித்த, ஆசியுரை, மதிப்புரை வழங்கிய அறிஞர்களுக்கும், சிவாச்சாரியர்கள், இசைஞானிகள், ஒலி, ஒளி அமைப்பாளர்கள், அச்சகத்தினர் ஆகியோருக்கும் இணுவில் கந்தசாமி கோவில் இளந் தொண்டர் சபையினருக்கும் பெருந்திரளாக வருகை தந்து வாழ்த்துக்கள் அன்பளிப்புகள் வழங்கிய மெய்யன்பர்கள், நண்பர்கள், சுற்றத்தவர்கள் ஆகியோருக்கும் எமது உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிவ. நாகேஸ்வரக்குருக்கள்
தம்பதியினர்

மயிலணி,
சுன்னாகம்.
(6637)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 291இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02-09-1993 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## இளாலி படகோட்டிகள் கவனத்துக்கு

இளாலி படகுச் சேவையில் ஈடுபடும் படகோட்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் நாளை வெள்ளி முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 4மணி வரை இளாலி மக்கள் போக்குவரத்து காரியாலயத்தில் வழங்கப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளாலி படகுச் சேவையில் ஈடுபடும் அனைத்துப் படகோட்டிகளும் தமது சுய விவரங்களுடனும், ஏற்கனவே வழங்கப்பட்ட படகு இலக்கங்களுடனும் அங்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

படகோட்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொண்டவர்கள் மட்டுமே இனிவரும் படகுச் சேவைகளில் படகோட்டிகளாகச் செயற்படலாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## சந்நிதியில் பெரும் கூட்டம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய தேர்த்திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வெகு சிறப்பாகவும், பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது.

பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் செல்வச்சந்நிதி முருகன் தேரில் பவனி வந்ததைத் தரிசித்து அவனது அருளைப் பெற்றுக் கொண்டனர். குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்து பக்தர்கள் திரண்டிருந்தனர்.

நூற்றுக்கணக்கான காவடிகள் மற்றும் பறவைக் காவடிகள் நாளா திசைகளில் இருந்தும் ஆலயத்தை வந்தடைந்தன.

நேற்றைய தீர்த்தத் திருவிழாவிலும் பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர்.

இன்று இரவு சிறப்பு மிகு திருவிழாவான பூந்திருவிழா நடைபெறும். (அ-15-17)

## விளையாட்டு நிகழ்வுகள்

பாஷையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் கழக மைதானத்தில் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இன்று மாலை நடைபெறும் கால் இறுதியாட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3.45 மணி:- பாடும் மீன் "ஏ" எதிர் பாரதி

★ 5.00 மணி:- சென். நிக்கிலஸ் அணி எதிர் ஞான முருகன் அணி (உ)

### இஸ்ரேல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்த பேச்சுக்களே இஸ்ரேலையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் தீர்வு ஒன்றுக்கு மிகவும் நெருக்கமாகக் கொண்டு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் மத்திய கிழக்கு சமாதானப் பேச்சு வார்த்தைகளின் பதினோராவது அமர்வு நேற்று வாஷிங்டனில் ஆரம்பமானபோது இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுவதற்கு இருந்துவரும் இறுதித் தடைகளை நீக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. (இ 6)

### சித்த மருத்துவ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ருப்பது தெரிந்ததே.

இதேவேளை—

யாழ் சித்த மருத்துவ மாணவர்களின் போராட்டத்திற்கு தங்களின் பூரண ஆதரவைத் தருவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் பேரவையின் அமைப்பாளர் எச். எம் ஏ ஹேரத் பி. பி. ஸி.யின் சிங்கள சேவைக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

### பருத்தித்துறைக்கு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும்—

இன்று பொருள்கள் இறக்கும் வேலைகள் பருத்தித் துறையில் ஆரம்பிக்கப்பட்டதும் அந்தக் கப்பல்கள் இரண்டும் பருத்தித்துறைக்கு வரும் என்றும் நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

திங்கட்கிழமை காலை உரவகைகளுடன் காங்கேசன் துறை வந்து சேர்ந்த "ஓசியானிக்" கப்பலும் இரண்டொரு தினங்களில் இங்கு வரும் என்று துறைமுக வட்டாரம் தெரிவித்தது. (அ-5-8-178)

## 200 பேருக்கு வெற்றிடம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைக்கு அமைய 10 சத வீதமான மாணவர்கள் தமக்கு விரும்பிய பல்கலைக் கழகத்தை தெரிவு செய்யும் உரிமையை கொண்டுள்ளனர் இதன்படி 1991 — 92 ஆம் கல்வி ஆண்டுக்கு யாழ். மருத்துவ பீடத்துக்கு சேர்த்துக் கொள்ளப்பட இருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 60 ஆகும்.

1990 — 91 ஆம் கல்வி ஆண்டுக்கு மொத்தம் 8 ஆயிரம் மாணவர்கள் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். 1991 — 92 ஆம் கல்வி ஆண்டுக்காக பல்கலைக் கழகங்களில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை சுமார் 9 ஆயிரம் ஆகும்.

வருங்காலத்தில் மருத்துவ பீடத்துக்கு அதிக எண்ணிக்கையான மாணவர்களை அனுமதிக்க உயர்கல்வி அமைச்சு உத்தேசித்துள்ளது. மருத்துவ மாணவர்களுக்கான செய்முறைப் போதனை வசதிகளைப் பெற்றுக் கொள்ள சுகாதார அமைச்சுடன் உயர்கல்வி அமைச்சு பேச்சு நடத்த உள்ளது மருத்துவ பல்கலைக் கழகங்களுக்கு அருகில் உள்ள ஆஸ்பத்திரிகளில் பயிற்சி வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியுமானால் மருத்துவ மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடியதாக இருக்கும்.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

1991 — 92 கல்வி ஆண்டு அனுமதிக்கான வெட்டுப் புள்ளிகள் இன்னும் வெளியிடப் படவில்லை என்பதும் —

யாழ். பல்கலைக் கழகத்துக்கு தேவையான எண்ணிக்கையுள்ள மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை உருவாகியிப்பதாலேயே இந்தத் தாமதம் என்ற தகவலை உதயன் ஏற்கனவே (28-8-93 இதழில்) வெளியிட்டிருந்ததும் தெரிந்தவையே.

### மண்கிண்டி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகள் எதிர்வரும் மூன்று மாதங்களில் மேலும் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது மண்கிண்டிமலை, இளாலி—பருத்தித்துறை கடற்கரும்புலிகள் தாக்குதல்கள் போன்ற பெரிய தாக்குதல்களில் அவர்கள் மீண்டும் ஈடுபடக்கூடும்—

எனினும் அவற்றை எதிர்கொள்ள இராணுவம் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது—

தங்கள் போராளிகளின் மனோநிலையை வளர்ப்பதற்காக விடுதலைப் புலிகள் இராணுவம் மீதான தாக்குதலை வலுப்படுத்தக் கூடும்—

எனினும் விடுதலைப் புலிகள் இயக்கத்திலும் சமாதானத்தை விரும்புவர்கள் இருப்பதாக நாம் அறிகிறோம். அதேபோலசமாதானப் பேச்சு நடத்துமாறு சாதாரண மக்களிடமிருந்து விடுதலைப் புலிகளுக்கு அழுத்தம் கொடுக்கப் படுவதாகவும் அறியப்படுகிறது—

அரசைப் பொறுத்தவரையில் வடக்கு—கிழக்கு தேர்தலை நடத்துவதில் அது ஆர்வமாக உள்ளது. அடுத்த வருடமளவில் தேர்தலை நடத்த முடியுமென அரசு எதிர்பார்க்கிறது—என்றும் பிரதமர் தமது உரையில் தெரிவித்தார்.


மரண அறிவித்தல்கள்

நமசிவாயம் நடேசபிள்ளை
(இளைப்பாறிய பொலிஸ் சார்ஜண்ட்)

மீசாலை வடக்கைச் சேர்ந்த நமசிவாயம் நடேசபிள்ளை 01 - 09 - 1993 அன்று காலமாகிவிட்டார்.

இவர் நல்லம்மாவின் அன்புக் கணவரும், ஸ்ரீசாந்தநிகேதனி, ஸ்ரீசாரதாமணி, ஸ்ரீரஞ்சனி, ஸ்ரீநடேஸ்வரன் (சவூதி), ஸ்ரீமுரளீதரன் (மின்சாரசபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதர்மசுந்தரம், மகேந்திரன் (C. T. B. யாழ்.), மிதிலை செல்வி (ஆசிரியை) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01 - 09 - 1993 அன்று வேம்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரீமுரளீதரன் (மகன்)

மீசாலை வடக்கு,
வேம்பிராய்.
(27147)

திருமதி நாகம்மா வயித்திலிங்கம்

கரம்பொன் மேற்கு, ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி நாகம்மா வயித்திலிங்கம் நேற்று (1-9-93) காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பையா வயித்திலிங்கம் (தபால் அதிபர் - சிக்னலர் ஸ்பெஷல் கிளாஸ்) அவர்களின் அன்பு மனைவியும், ஜகந்நாயகி (ஆசிரியை யா/சேர் வை து.ம.ம.வி. வேலணை, யா/ கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), ஸ்வரூபராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற V. கந்தையா (ஓய்வு எக்சாமினர்), V. நவரட்ணம் (முன்னாள் ஊர்காவற்றுறை M.P., புரொக்டர்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2-9-93) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு இல. 1, செம்மணி வீதியில், (யமுனாரி ஒழுங்கை) இருக்கும் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் செம்மணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
செல்வி ஜே. வயித்திலிங்கம்
(மகள்)

இல. 1, செம்மணி வீதி,
முத்திரைச் சந்தை,
யமுனாரி ஒழுங்கை,
நல்லூர்.
(27154)

திருமதி அற்புதம் இராசதுரை
[இளைப்பாறிய ஆசிரியை, விக்கினேஸ்வராக் கல்லூரி கரவெட்டி]

கரவெட்டியைச் சேர்ந்த திருமதி அற்புதம் இராசதுரை நேற்று (01-09-93) காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொலீஸ் உத்தியோகத்தர் இராசதுரையின் அன்பு மனைவியும், இயூச்சின்பிறின்ஸ் (குவைத்), பீலிக்ஸ் டியூக் (வதனன், நோர்வே) ஆகியோரின் அன்புத் தாயாரும், உதயகுமாரி, விஜேந்தி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமியும், யூட்சென், தமிழெலந்சென், டனிசென் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (2-9-93) பிற்பகல் மூன்று மணியளவில் கரவெட்டிச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இயூச்சின் உதயகுமாரி
(மருமகள்)

"சொர்ணமாளிகை",
கரணவாய் கிழக்கு,
கரவெட்டி.
(27158)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org